**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**

**MCOP No. 156/2024**

**நாள் –05.06.2026.**

**PW 1 – கணேசன்**

**(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)**

**முதல் விசாரணைத் தொடர்ச்சி –**

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட ஊனசான்றிதழ் **நீ.ம.சா.ஆ.1**. மனுப்படி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை –**

இரண்டு வாகனங்களும் எதிரெதிரில் வந்து மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சாலையின் இடதுபுறமாக சரியான திசையில் சென்றேன் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் போலிசார் தாக்கல் செய்த இறுதியறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் வகையில் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது மோதிய டிப்பர் லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் சிகிச்சைக்கு சேர்ந்த செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பதிவு செய்த விபத்து பதிவேட்டை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்ற ஆவணங்களை தவிர்த்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டதற்கான ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு காலில் அடிப்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயம் எந்த வகையிலும் எனது ஆட்டோ ஓட்டும் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட இயலாமை

Sd/-                                                                 கணேசன்

தற்சமயமானது என்றும், எதிர்காலத்தில் சரியாக கூடியது என்றும் அதனால் தான் ஊனச்சான்றிதழில் அதுகுறித்து விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வந்தேன் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆட்டோ பயன்படுத்த முடியாத நிலைக்கு சென்றுவிட்டது என்பதை காண்பிக்கும் ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எனது தவறினால் ஏற்பட்டது என்றும், டிப்பர் லாரி ஓட்டுநரின் தவறினால் ஏற்படவில்லை என்றும் அதனால் எனக்கு விபத்து இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து வாகனத்தை ஓட்டிவந்த டிப்பர் லாரி ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த லாரியை விபத்து நடந்த இடத்தில் ஓட்டுவதற்கான அனுமதி(Permit) இல்லை என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த லாரியின் காப்பீடு விபத்திற்கு 3 நாட்களுக்கு முன்பு காலாவதியாகிவிட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்பதாலும், Permit இல்லை என்பதாலும், வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், விபத்திற்கான இழப்பீட்டினை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 05-06-2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

5/6/26.
தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.